**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் 21-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 5/2025**

**இன்**
**அசல் வழக்கு எண்.26/2020**

1.பாண்டி (**இறப்பு**)
2.பிச்சைக்கண்ணு (**இறப்பு**)
3.மேநாட்டான்
4.குருசாமி
5.நீலாவதி
6.அழகு
7.பிச்சை
8.காந்தி
9.குருநாதன் (**இறப்பு**)
10.பாலமுருகன்
11.வீரலட்சுமி
12.ராமு
13.தனலெட்சுமி
14.தனபாலன்
15.நாகவள்ளி
16.செல்வராணி
17.பாண்டியம்மாள்
18.ஆறுமுகம் ..... மனுதாரர்கள் / வாதிகள்
19.பொன்னுத்தாய் ..... 19ம் மனுதாரர்/9ம் வாதியின் வாரிசு

**/எதிர்/**

1. **P.**S.சுப்பிரமணிய அய்யர்
2.S.கண்ணன்
3.மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
4.வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை
5.வட்டாட்சியர், மானாமதுரை .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 17.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**P.**ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும்,

1, 2 எதிர்மனுதாரரகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

**1.** மனுதாரர்கள் தரப்பில் கட்டளை.22 ரூல்.3 மற்றும் பிரிவு.151 உரிமையியல் விசாரணை சட்டத்தின்படி கடந்த 07.08.2025ம் தேதியன்று இறந்துபோன 9ம் வாதி குருநாதன் என்பவரின் வாரிசான 19ம் Proposed மனுதாரரை 19ம் வாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>2. மனுவின் சுருக்கம்:</u>**

தாவா வழக்கில் 9ம் வாதி குருநாதன் என்பவர் கடந்த 07.08.2025ம் தேதியன்று இறந்துவிட்டதால், குருநாதன் என்பவருக்கு இந்த மனுவில் கண்ட 19ம் மனுதாரரை 19ம் வாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என்றும், தாவா மனுவை அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளதாகவும் மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>4.. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-</u>**

மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதாகவே உள்ளது. ஒரு ஆளுடைய வழக்கு ஒரு ஆளுடன் முடிவதில்லை. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்து போன 9ம் வாதி குருநாதன் என்பவரின் வாரிசான 19ம் மனுதாரரை 19ம் வாதியாக தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்துவதற்கு எஞ்சியுள்ளது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுதொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் நவம்பர் 21-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.21 04:27:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் - இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.21 04:27:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No. 5/2025**
**in**
**OS. No. 26/2020**

**Dated: 21.11.2025**